# The Concept of Perception- A comparative study based on Perception of John Locke and Samkya Philosophy

**P.Poologanathan**
Department of Philosophy, University of Peradeniya

**Abstract**

This research is a comparative study of Western Philosopher John Locker's doctrine of Perception and the perception indicated in the Samkya Philosophy. In the modern period, the study of human knowledge in western philosophy started with an Essay Concerning Human Understanding of John Locke. Locke insisted that the doctrine of perception as the main source of the human knowledge. Further, he also noted that this perception is being derived through two ways, such as sensation and reflection. The perception take place, how is it that first senses get the sense data from outside world, then mind makes it as a perceptual knowledge by means of reflection. Hence, he insisted that senses and mind are essential for perception. Similarity, Indian philosophical school of Smakya Philosophy also accepted that the doctrine of perception is the basic for gaining knowledge. According to perception of Samkya philosophy, although perception is determined by sense and mind, the intellect (Buddhi) is another stage for the gaining knowledge. Therefore, the main objective of this study that comparative analysis of Locke's doctrine of perception and perception of Samkya Philosophy in order to bring out the similarities and differences between them. For this study, Comparative and Analytical methods are utilized and also the data is collected from primary and secondary sources.

**Key words-** Sensation, Reflection, Perception, Knowledge, Senses.

# காட்சிக் கோட்பாடு - சாங்கிய மெய்யியல் மற்றும் ஜோன் லொக்கின் காட்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதோர் ஒப்பீட்டு ரீதியான ஆய்வு.

## 01. ஆய்வின் அறிமுகம்

மெய்யியலின் பிரதான கிளைகளில் ஒன்றாக அறிவாராய்ச்சியியல் விளங்குகின்றது. அறிவாராய்ச்சியியலானது மனித அறிவின் தோற்றம், அதன் இயல்பு, அறிவினை நாம் பெறும் வழிமுறைகள், நிச்சயமான அறிவினைப் பெறும் முறைகள், நிச்சயமான அறிவுக்கும் நிச்சயமற்ற அறிவுக்குமுள்ள வேறுபாடுகள் போன்ற விடயங்களினை ஆராயும் ஓர் துறையாகும்.[1] ஐரோப்பிய அறிவாராய்ச்சியியலில் அறிவினைப் பெறுவதற்குரிய வாயில்கள் பல காணப்படுவது போன்று இந்திய அறிவாராய்ச்சியியலிலும் அறிவினைப் பெறும் வாயில்களாகப் பத்துக்கும் மேற்பட்ட அளவைப் பிரமாணங்கள் (Sources of Knowledge) வற்புறுத்தப்பட்டுள்ளன.[2] இவற்றுள் இந்திய வைதீக (Orthodox), அவைதீக (Herthodox) சமயங்கள் யாவும் ஏற்றுக்கொண்டதோர் அளவைப் பிரமாணமாகக் காட்சி (Perception) அமைகின்றது.[3] காட்சி என்பது பிரத்தியட்ச (Prakthiyaksa) எனும் சமஸ்கிருத சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இது பிரதி, அக்ச எனும் இரு சொற்களின் இணைவினால் ஆனது. பிரதி என்பது அருகே எனவும், அக்ச என்பது புலன் உறுப்புக்கள் எனவும் பொருள் கொள்ளப்பட்டு கண்ணுக்கோ அல்லது புலனுறுப்புக்கோ முன்னால் வைத்தல் காட்சி எனப் பொருள்படும். (Present to or before the eye or any other organ) [4]

இந்திய அளவையியலில் காட்சிப் பிரமாணத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவது போன்று மேற்கத்தேய அறிவாராய்ச்சியியலிலும் காட்சிக் கோட்பாடு அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக நேர்காட்சி வாதம் (Realism), புலன்தரவுக் கோட்பாடு (Sense data theory), பிரதிநிதித்துவக் காட்சிக் கோட்பாடு (Representative realism) போன்றவற்றை உதாரணமாக குறிப்பிடலாம்.[5] பிரித்தானிய அனுபவவாத மெய்யியலாளரான ஜோன்லொக் (John Locke) தனது பிரதிநிதித்துவக் காட்சிக் கோட்பாட்டில் அறிவினைப் பெறும் பிரதான வாயிலாக புலக்காட்சி (Sense perception) என்பதனைக் குறிப்பிடுகின்றார். இதனைத் தனது அறிவாராய்ச்சியியல் பற்றிய நூலான *மனித அறிவு பற்றிய கட்டுரை (An Essay Concerning Human Understanding)ல்* ஆராய்கின்றார். அது மட்டுமன்றி இக்காட்சி எவ்வாறு இடம்பெறுகின்றது என்பது பற்றியும் இதனூடாக நாம் எத்தகைய அறிவினை அடைய முடியும் எனவும் இந்நூலில் ஆராய்கின்றார். லொக் தனது கட்டுரையில் காட்சியறிவு பற்றிக் குறிப்பிடும் பொழுது புலனுணர்ச்சி (Sensation), ஆழ்ந்து எண்ணல் (Reflection) எனும் இரு வழிகளினூடாகவே எமது காட்சியறிவு கட்டியமைக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். அதாவது புலனால் பெறப்படும் விடயங்கள்

மனதின் ஆழ்ந்து எண்ணல் எனும் பகுதியினூடாகப் பகுப்பாய்விற்கு உட்பட்டு காட்சி பற்றிய அறிவு இடம் பெறுவதாக லொக் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். எனவே காட்சி இடம்பெறுவதற்கு அடிப்படையாகப் புலனும் மனமும் இன்றியமையாதது என்பதனை லொக் இங்கு வற்புறுத்துகின்றார்.[6]

மேற்கத்தேய மெய்யியலில் அறிவினைப் பெற காட்சியை லொக் வலியுறுத்துவது போன்று இந்திய சிந்தனைகளான சாங்கியம், யோகம், நியாயம், வைசேடியம், அத்வைதம், சைவசித்தாந்தம் போன்ற வைதீக சமயங்களும், பௌத்தம், உலோகாயுதம் போன்ற அவைதீக சமயங்களும் காட்சியின் முக்கியத்துவத்தினை அறிவாராய்ச்சியியலில் வற்புறுத்துகின்றன. இந்திய தத்துவத்தில் சாங்கியத்தில் குறிப்பிடப்படும் காட்சி பற்றி நாம் நோக்கும் போது சாங்கியம் என்பது பூரண அறிவு என்பதாகும். கபிலரின் சாங்கிய தத்துவத்தில் பூரண அறிவைப் பெறுவதற்கான அறிவாராய்ச்சியியல் கருத்துக்கள் இடம்பெறுகின்றன. சாங்கிய தத்துவமானது மூலப்பொருள் பற்றிய பூரண அறிவைப் பெறும் வாயிலாகக் காட்சி, அனுமானம், உரை ஆகிய மூன்றையும் பிரமாணங்களாக ஏற்கின்றன. காட்சியினை அது நிகழும் தன்மையைப் பொறுத்து நிர்விகற்ப காட்சி, சவிகற்பக் காட்சி என வேறுபடுத்தும் சாங்கியம் காட்சி பற்றிய படிமுறைகளைப் பின்வருமாறு விளக்குகின்றது.[7] புறத்திலிருந்து புலன்களினால் பெறப்படும் அறிவானது மனதினை (மகத்) சென்றடைந்து அங்கிருந்து புத்தியைச் சென்றடைந்து புத்தியானது புருஸன் (ஆன்மா) வின் துணைகொண்டு காட்சியறிவு இடம்பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இங்கு சாங்கியம் குறிப்பிடும் காட்சியானது புலன், மனம் என்பவற்றுக்கு மேலாலாக உயரிய தளங்களான புத்தி (Buddhi), ஆன்மா எனும் தளங்களையும் அடைந்து காட்சியறிவு தீர்மானிக்கப்படுவதாக சாங்கிய காட்சிக் கோட்பாடு குறிப்பிடுகிறது. ஆனால் லொக் காட்சியில் புலன், மனம் என்பவற்றை மட்டும் ஏற்றிருந்தாலும் சாங்கியம் இதற்கு அப்பால் புலன், மனம், புத்தி, புருஸன் (ஆன்மா) என்பவற்றையும் தனது காட்சிக் கோட்பாட்டில் ஏற்றுக்கொள்கிறது. எனவே இவ்வாய்வானது இரு காட்சிக் கோட்பாடுகளையும் ஒப்பிட்டு அவற்றுக்கிடையிலான ஒத்த வேறுபட்ட தன்மைகளை ஆராய்வதாக அமைகின்றது.

## 02. ஆய்வுப் பிரச்சினை

ஜோன் லொக்கினது அறிவாராய்ச்சியியலின் காட்சிக் கோட்பாட்டினையும் சாங்கிய தத்துவம் குறிப்பிடும் காட்சிக் கோட்பாட்டையும் ஒப்பிட்டு அவற்றுக்கிடையிலான ஒத்த, வேறுபட்ட தன்மைகளைக் கண்டறிவதே இவ்வாய்வின் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

## 03. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இரு வேறுபட்ட காட்சிக் கோட்பாடுகளிலும் உயர்வுத் தன்மை பெற்ற காட்சிக் கோட்பாட்டைக் கண்டறிதல்.

2. இரு காட்சிக் கோட்பாடுகளுக்கிடையிலுமான ஒத்த, வேறுபட்ட தன்மைகளைக் கண்டறிதல்.

**04. ஆய்வின் கருதுகோள்**

இவ்வாய்வின் பிரச்சினையினை வெளிக்கொனரும் வகையில் பின்வரும் கருதுகோள் முன்வைக்கப்படுகிறது.

ஜோன் லொக்கின் காட்சிக் கோட்பாட்டிலும் பார்க்க சாங்கிய தத்துவத்தின் காட்சிக் கோட்பாடானது சற்று உயர்வுத் தன்மை பெற்றதாகவும், நிச்சயதன்மை பெற்றதாகவும் குறிப்பிடலாம்.

**05. ஆய்வின் முறையியல்**

இவ்வாய்வின் நோக்கத்தினை நேர்த்தியான முறையில் அடைந்து கொள்வதற்கு பின்வரும் ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாய்வுக்குரிய முறையியல்களாக பகுப்பாய்வு முறை (Analytical Method), ஒப்பீட்டாய்வு முறை (Comparative Method) என்பன பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் இவ்வாய்வுக்குரிய தரவுகள் யாவும் முதல்நிலை, இரண்டாம்நிலைத் தரவுகளாகப் பெறப்பட்டு ஆய்வு பூரணப்படுத்தப்படுகிறது. முதல் நிலைத் தரவாக லொக்கின் *An Essay Concerning Human Understanding* எனும் நூலும், இரண்டாம் நிலைத் தரவுகளாக இவ்வாய்வு சார்ந்து வெளிவந்த ஏனைய உரை நூல்கள் மற்றும் இணையதளங்களில் வெளிவந்த சிறுசிறு கட்டுரைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட இருக்கின்றது.

**06. ஆய்வு தொடர்பான விவாதங்களும் ஒப்பீடுகளும்.**

**அ. லொக்கின் காட்சிக் கோட்பாடு**

நான்கு புத்தகங்களாக வெளிவந்த லொக்கின் *மனித அறிவு பற்றிய கட்டுரையின்* இரண்டாவது புத்தகத்தில் லொக் தனது காட்சிக் கோட்பாட்டை தெளிவுபடுத்துகின்றார். இங்கு லொக் மனித அறிவு பற்றிக் குறிப்பிடும் பொழுது, மனிதன் பிறக்கின்ற பொழுது அவனது மனமானது ஓர் வெற்றுக் கரும்பலகை, வெண்ணிறக் கடதாசி (*Tabula Rasa*) போன்றது என்றார். இங்கு எமது அறிவனைத்தும் காட்சியினூடாக கிடைக்கப் பெறுகின்றது என்பதைக் குறிப்பிடும் லொக் காட்சியறிவானது புலனுணர்ச்சி (Sensation), ஆழ்ந்து எண்ணல் (Reflection) எனும் இரு வழிகளினூடாகக் கிடைக்கப் பெறுகின்றது என்றார். இவை இரண்டும் ஓர் இருண்ட அறையில் ஒளி ஊடுருவிச் செல்ல உதவும் இரு பலகணிகள் போன்றது என்றார். அதாவது புலனால் அறியப்பட்ட விடயங்கள் உளத்தின் ஆழ்ந்து எண்ணல் எனும்

பகுதியினூடாக பாகுபாடு செய்யப்பட்டு காட்சியறிவு இடம்பெறுவதாக லொக் குறிப்பிடுகின்றார். ஆயினும் இவை இரண்டும் ஒரே சமயத்தில் செயலாற்றுவதில்லை என்றும் ஒன்றுக்குப் பின் ஒன்றாகவே செயலாற்றுகின்றன எனவும் குறிப்பிடுகின்றார். அதாவது புலனால் அறியப்படுவது மனதின் ஆழ்ந்து எண்ணல் மூலமாக பாகுபாடு செய்யப்பட்டு காட்சியறிவு இடம்பெறுவதாக லொக் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.[8]

இங்கு மனம் எனும் தளத்தில் புலனால் பெறப்பட்ட விடயங்களை பிரித்தறிதல் (Discerning), ஒப்பிடுதல்(Comparing),பெயரிடுதல்(Naming),நிணைவிலிருத்தல்(Retention), கலத்தல் (Compounding) போன்ற மனச் செயற்பாட்டின் விளைவாக காட்சி இடம்பெறுகின்றது என்பதனை லொக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு காட்சியினூடாகக் கிடைக்கப்பெறும் அறிவினை லொக் எண்ணங்கள் (Ideas) என்று குறிப்பிட்டார். இவ் எண்ணங்களை தனிநிலை எண்ணங்கள் (Simple ideas) என்றும், கூட்டு நிலை எண்ணங்கள் (Complex ideas) என்று பாகுபாடு செய்தார். மனித உளத்தின் முதலாவது திறமையினால் பெறப்படும் எண்ணங்கள் தனிநிலை எண்ணங்களாகும். இத் தனிநிலை எண்ணங்கள் உளத்தின் தொழிற்பாடு முறையிலே நிகழ்கின்றன. இவ் தனிநிலை எண்ணங்கள் நான்கு வகையாகப் பாகுபாடு செய்யப்படுகிறது.

மனித உளத்தின் இரண்டாவது திறமை இத்தனிநிலை எண்ணங்களை மீண்டும் பெறல் (Passively Receiving), அவற்றுடன் ஏனைய தனிநிலை எண்ணங்களை இணைத்தல் (Combination), உறவுபடுத்தல் (Relation), மற்றையவைகளிலிருந்து பிரித்தல் (Separation) போன்ற செயல்களால் கூட்டுநிலை எண்ணங்களை உளம் பெறுகிறது. உளம் இவ் எண்ணங்களைத் தானாகப் படைப்பதில்லை (In this it is active but any Creative). உளம் தனிநிலை எண்ணங்களை பெறுவது அதன் செயற்படு வகையிலேயே இருக்கிறது. உளம் தன்னாற்றலால் தனிநிலை எண்ணங்களைப் பெறுகிறது. கூட்டுநிலை எண்ணங்கள் யாவும் தனிநிலை எண்ணங்களால் ஆக்கப் பெற்றவை. ஒரு சுவரைக்கட்ட கற்கள் தேவைப்படுவது போல கூட்டுநிலை எண்ணங்களைப் பெற தனிநிலை எண்ணங்கள் தேவைப்படுகின்றன. இக்கூட்டுநிலை எண்ணங்கள் பலவாயினும் அவை 03 வகையாகப் பிரிக்கப்படுகிறது. இவ் எண்ணங்கள் யாவும் காட்சியினூடாக இடம்பெறுவதாகக் குறிப்பிடுகின்றார்.[9]

எனவே காட்சி இடம்பெறுவதற்கு மூன்று அடிப்படை அம்சங்களை லொக் தனது அறிவாராய்ச்சியியலில் ஏற்கின்றார். அவை மனம், புலன், புறப்பொருள் என்பவையாகும். இவ்வாறு காட்சியினூடாகப் பெறப்படும் அறிவு உண்மையின் பிரதிநிதித்துவம் (Representative of Realism) என்றார். இதுவே இவரது

பிரதிநிதித்துவக் காட்சிக் கோட்பாடாகும். இவ்வாறு லொக் தனது கட்டுரையில் காட்சி இடம்பெறுவதற்கு மனம், புலன் என்பவற்றின் பங்களிப்பினைக் குறிப்பிடுவதுபோன்று சாங்கிய மெய்யியலும் காட்சியில் மனம், புலன் சம்பந்த நிலையினை வற்புறுத்துகிறது.

**ஆ. சாங்கிய தத்துவத்தில் காட்சிக் கோட்பாடு**

வைதீக சமயங்களில் மிகவும் முக்கியமான தத்துவமாக சாங்கியக் கோட்பாடு விளங்குகின்றது. சாங்கியம் பற்றிக் கிடைக்கப் பெறும் நூல்களில் மிகப் பழமையானது கி.பி. 5ம் நூற்றாண்டில் ஈஸ்வரகிருஸ்ணரால் எழுதப்பட்ட சாங்கிய காரிகையாகும். சாங்கியம் ஒன்றுக்கொன்று வேறுபட்ட புருஷன், பிரகிருதி (ஆன்மா, சடம்) எனும் இரு அடிப்படைப் பொருட்களை ஏற்றுக் கொண்டு உலக தோற்றமானது பிரகிருதி வழியான இருபத்தினான்கு (24) தத்துவங்களின் வழி நிகழ்கின்றது எனவும், இருபத்தைந்தாவது (25) தத்துவமாக புருஸ தத்துவம் அமைகின்றது எனவும் குறிப்பிடுகின்றது. இங்கு பிரகிருதியே முதற்காரணமாய் அமைந்து அதிலிருந்து பரிணாம வளர்ச்சி அடிப்படையில் இவ்வுலக செயற்பாட்டை விளக்குகிறது. பிரகிருதியிலிருந்து மகத்தும் அதிலிருந்து அகங்காரமும் அதிலிருந்து ஐந்து தன்மாத்திரைகள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் யாவும் தோற்றுவிக்கப்படுகிறது. இருபத்தி ஐந்தாவது தத்துவமாக புருஸ தத்துவம் விளங்குகின்றது. புருஸன் அறிவே சொரூபமான ஆன்மா என்றும் இது தோற்றுவிக்கப்படும் பொருளுமன்று, தோற்றுவிக்கும் பொருளுமன்று எனக் குறிப்பிடுப்படுகிறது. புருஸனுக்கு உண்மையிலே இறப்பு, பிறப்பு இல்லை என்று குறிப்பிடப்படுகிறது.[10]

சாங்கியம் மூலப்பொருள் பற்றிய பூரண அறிவைப் பெறவதற்கு பிரதியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் (உரை) எனும் மூன்று அளவைப் பிரமாணங்களையும் ஏற்கிறது. சாங்கிய தத்துவமானது காட்சியினை வரையறுக்கும்போது காட்சியானது ஆராயப்படும் பொருளின் விம்பம் (Image) அல்லது எண்ணத்தில் நிகழ்வதாக ஏற்கிறது. இந்நிகழ்வு வெறுமனே ஆத்மன் நினைப்பது போல் நடப்பதில்லை. புறத்திலிருந்து புலன்கள் மூலமாக பொருத்தமான தூண்டுதல் பெறப்படும் போது புத்தியே பொருளின் உருவத்தை வரையறுக்கிறது. சாங்கியத்தின் அறிதல் முறையில் மகத் (Mahath) என்று குறிப்பிடப்படும் புத்தி முக்கியத்துவம் பெறுகிறது. ஆயினும் புத்தி இங்கு பிரகிருதியின் வெளிப்பாடாக காட்டப்படுவதனால் பிரகிருதி சடமாதலால் அதன் வெளிப்படான புத்தியும் சடமேயாகும். சடம் அறிதலைச் செய்ய முடியாது. எனவே பிரகிருதியிலிருந்து தனித்துவமான புருசனின் (ஆன்மா) துணை கொண்டே அறிதல் நடைபெறுகின்றது. அறிதலில் முதலில் பொருள் ஒன்று அல்லது ஒன்று மேற்பட்ட புலன்களில் பதிகின்றது. இந்நிலையில் கிடைக்கும் அறிவு தெளிவற்றதாக வெறும் உணர்வாகவே இருக்கும். இது நிர்விகற்ப நிலையாகும். பின்னர் அது மனதுடன் சம்பந்தப்படுகின்ற போது தெளிவான காட்சி கிடைக்கப் பெறுகின்றது. இது சவிகற்ப நிலையாகும். ஆனால் இவற்றுக்கு சாங்கியம் கூறும் பொருள் மற்றைய முறைமை கூறும் பொருளிலிருந்து வேறுபடுகின்றது. வரையறையற்ற புலக்காட்சி

அல்லது நிர்விகற்பம் என்பது இங்கே வரையறை செய்யப்பட்ட புலக்காட்சி அல்லது சவிகற்ப நிலையில் பிரிந்து கிடக்கும் தனிமங்களை ஒன்று சேர்க்கும் புலக்காட்சியன்று.

சாங்கியத்தில் புலக்காட்சியானது இலகுகருதி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது. புலன்கள் பொருட்களை வரையறையற்ற முறையில் காண்கின்றன. பின்பு அத்தகைய புலக்காட்சிகளை மனதிற்குக் கொண்டு வருகின்றன. மனம் அவற்றை ஒன்று திரட்டி அகங்காரத்திற்கு எடுத்துச் செல்கின்றது. அகங்காரம் அவற்றை ஆன்மாவிடம் சேர்க்கிறது. அந்த ஆன்மா, புத்தியை அவற்றின் தன்மையை அறிந்து சொல்லுமாறு பணிக்கிறது. இச்செயல் முறையானது வரி வசூலிக்கும் முறையோடு ஒப்பிட்டுக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து கிராமிய கணக்கர் வரி வசூலித்துக் கிராம அதிகாரியிடம் சேர்ப்பார். அதனை அவர் ஆளுனரிடம் அனுப்புவார். வசூலிக்கப்பட்ட வரி அனைத்தையும் அரச கருவூலத்தில் சேர்க்க வேண்டிய பொறுப்பு ஆளுனரைச்சாரும். இச் செய்முறை போன்றதே சாங்கியத்தின் காட்சிக் கோட்பாடும் ஆகும்.[11]

எல்லா அறிதல் முறைகளிலும் அறிவாற்றல் அல்லது புத்தி என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. விருத்தி என்ற உருமாற்ற முறையின் உதவி கொண்டு அது காணப்படு பொருளின் வடிவத்தைக் கொள்கிறது. இந்த உருமாற்றமே நேரடியாக காணும் பொருளின் பிரதிபலிப்பாகும். அனுமானத்திற் கூட புத்தியானது பொருளின் வடிவத்தை புலன் கொள்ள வேண்டியதாகிறது. இல்லை எனின் அறிவினைப் பெற முடியாது. சாங்கிய தத்துவ முறையானது நியாய, வைசேடிக முறையின் காட்சிக் கொள்கை முறையாய் இருந்த போதிலும், அறிபவனுக்கும் அறிவிக்கப்படு பொருளுக்கும் இடையே இணைக்கும் சங்கிலியாய் விருத்தி (Viruthi) எனும் மன ஊடகத்தை (Psychic Medium) அவர்கள் தங்கள் முறையில் புகுத்தினார்கள். இது சாங்கியத்திற்குரிய தனிச் சிறப்பாகும். அறியும் பொருளுக்கும் அறியப்படும் பொருளுக்கும் உள்ள உறவு நேரடியான தன்று. அது நினைவுப் படிமத்தின் (Idea) ஊடாகக் கிட்டுவது என்றவாறாக சாங்கியம் தனது காட்சிக் கொள்கையை முன்வைக்கிறது.

சாங்கியம் காட்சியின் சவிகற்ப நிலை, நிர்விகற்ப நிலை எனும் வேறுபாட்டை ஏற்றுக் கொண்டிருப்பினும் சவிகற்பக் காட்சியில் மனம் வகிக்கும் பங்கு தொடர்பில் சாங்கிய தருக்கவியலாளர்களிடையே கருத்து முரண்பாடு காணப்படுகின்றது. சாங்கிய தருக்கவியலாளரான வாகஸ்பதியின் பிரகாரம், மனதின் செயல் புலன்தரவுகளை ஒழுங்குபடுத்துவதும் (Arranging the Sense Data), நிரைப்படுத்துவதும் (Ordering) என்று கொள்ளப்படுகின்றது. அதாவது பகுப்பாய்வு, இணைப்பு என்கின்ற அலுவல்கள் மனதின் செயலாகப் பெறப்படும். இக்கருத்துடன் தருக்கவியலாளரான விஞ்ஞான பிஸ்சுக்கு உடன்பாடில்லை. இவரது கருத்துப்படி ''புத்தியே நேரடியாக புலன்வாயில்களுக்கு ஊடாக தொடர்பு கொள்கின்றது எனவும், மனமானது வெறுமனே

எண்ணங்கள் பற்றிய துறையாகும் என்றும் இங்கு வெறுமனே விருப்பு, வெறுப்பு, சந்தேகம் போன்றவை உள்ளடக்கமாய் உள்ளது என்றும் குறிப்பிட்டார்".[12]

சாங்கிய காரிகையை மேற்கோள் காட்டிய இராதகிருஸ்ணா் காட்சி என்பது புலன், பொருள், தொடா்பால் பெறப்படும் அறிவு என்றாா். இதனை மேலும் விளக்குகையில் பாா்வைக்கு அடங்கக் கூடிய இடவெளியில் பொருள் தோன்றும் போது புத்தி அல்லது மகத்தானது அதன் வடிவத்தை பெறத்தக்கவாறு தன்னை நிலைப்படுத்துகின்றது. அப்பொழுது ஆன்மாவானது அப்பொருளின் இயல்பைப் பெறுகிறது. வேறுவகையில் கூறின் உளவியல்பான அறிகுறியால் காட்சி நிகழ்வதாக நம்பப்படுகிறது.[13]

நாம் மேலே குறிப்பிட்டது போன்று சாங்கியக் காட்சியில் புத்தியே புறத்தேயுள்ள பொருட்களுடன் புலனுறுப்புக்கள் மூலம் தொடா்பை ஏற்படுத்துகின்றது. இத் தொடா்புறும் முதல் நிலையில் அப்பொருள் பற்றிய குணாதிசயங்கள் அவதானிக்கப்படுகிறது. இந்நிலையில் நிா்விகற்பக் காட்சி கிடைக்கின்றது. தொடா்ந்து உளத்தில் நடக்கும் பகுப்பாய்வில் (Mental Analysis) பகுப்பும் இணைப்பும் ஆகிய நடவடிக்கையின் பிரகாரம் பொருளின் இயல்பு வரையறுக்கப்படும். இது திட்டவட்டமான காட்சியாக அதாவது சவிகற்பக் காட்சியாக கிடைக்கப்படுகிறது. சாங்கியக் காட்சியின் பிரகாரம் சவிகற்பக் காட்சியானது நிா்விகற்பக் காட்சியை அடுத்து பெறப்படுவதாக காட்டப்படுகிறது.

சாங்கியக் காட்சியினை லொக்கினது காட்சிக் கோட்பாட்டுடன் ஒப்பிட்டும் போது லொக்கினது காட்சிக் கோட்பாட்டின்படி, புலனுணா்ச்சி, ஆழ்ந்து எண்ணல் ஆகிய இவ்விரு வழிகளாலுமே எமது காட்சிக் கோட்பாடு கட்டியமைக்கப்பட்டு நாம் எண்ணங்களைப் பெறுகின்றோம் என்றும் இவை இரண்டும் ஓா் இருண்ட அறையில் ஒளி உடுருவிச் செல்ல உதவும் இரு பலகனிகள் போன்றது என்றும் குறிப்பிட்டாா். இங்கு அகப்புலக்காட்சி புறப்புலக் காட்சியை முன்னெண்ணமாகக் கொள்கிறது. புலனுணா்சியினூடாகப் பெறப்பட்ட விடயமானது மனதினால் பாகுபாடு செய்யப்பட்டு மனதின் துணை கொண்டு அறிவு பெறப்படுவதாக குறிப்பிடுகிறது. ஆனால் சாங்கியக் காட்சிக் கோட்பாட்டில் புலன் மனச் செயற்பாட்டுடன் புத்தியின் பங்களிப்பினையும் வற்புறுத்துகிறது. ஆனால் லொக்கினது காட்சிக் கோட்பாடு புலனுணா்வு, மனம் சம்பந்தப்பட்டதாக அமைய சாங்கியக் காட்சிக் கோட்பாடு புலன், மனம், அகங்காரம், புருசன், புத்தி என்றவாறான உள்ளாா்ந்த செயற்பாட்டு அடிப்படையில் காட்சி இடம் பெறுவதாகக் குறிப்பிடுகின்ற வகையில் இரு கோட்பாடுகளுக்குமிடையே வேறுபாடு புலப்படுகிறது. அதாவது புலனுணா்வினூடாக மனதிற்கு அளிக்கப்படுகின்ற விடயங்களை மனம் ஒன்று திரட்டி அகங்காரத்திற்கு அனுப்பி அகங்காரம் அவற்றை ஆன்மாவிடம் சோ்த்து ஆன்மா புத்தியின் துணை கொண்டு அறிவினைத் தீா்மானிக்கும் விதமாக சாங்கியத்தின் காட்சிக் செயற்பாடு அமைகின்றது. லொக்கின் காட்சிக்

கோட்பாட்டில் மனம் அறிவினைத் தீர்மானிக்கும் சக்தியாய் அமைய சாங்கியத்தில் ஆன்மா அறிவினைத் தீர்மானிக்கும் சக்தியாகக் காணப்படும் வகையில் இரு காட்சிக் கோட்பாடுகளுக்குமான வேறுபாடு புலப்படுகின்றது.

## 07. முடிவுரை

மேற்படி ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நாம் பின்வரும் முடிவுகளினை அடையக்கூடியதாக அமைகின்றது. சாங்கியமும் லொக்கின் காட்சிக் கோட்பாடு போன்று உளவியல் சார்ந்த தன்மையில் காட்சிச் செயற்பாட்டினை விபரித்திருந்தாலும் சாங்கியக் காட்சி லொக்கின் காட்சியிலிருந்து வேறுபட்டும் சற்று உயர்வு பெற்றது போன்றும் தோன்றுகின்றது. ஏனெனில் சாங்கியக் காட்சிக் கோட்பாட்டில் அறிவினைத் தீர்மானிக்கும் சக்தியாக மனதினைக் கொள்ளாது ஆன்மாவினை அறிவினைத் தீர்மானிக்கும் சக்தியாக கொள்வதனூடாக மனதினால் ஏற்படும் தாக்கங்கள் அதாவது பக்கச்சார்வு போன்ற விடயங்கள் சாங்கியக் காட்சிக் கோட்பாட்டில் குறைக்கப்படுகிறது. லொக் மனம் எனும் தளத்திலேயே இறுதியாகக் காட்சி பற்றிய அறிவு தீர்மானிக்கப்படுவதாக ஏற்றுக்கொள்வதோடு அவ்வாறு பெறப்படும் அறிவு உண்மையின் பிரதிநிதித்துவம் (Representative of realism) என்றார். ஆனால் சாங்கியம் மனம் எனும் தளத்திற்கு மேலாகப் புத்தி, ஆன்மா (புருசன்) எனும் தளங்களையும் காட்சியினைத் தீர்மானிக்கும் விடயங்களாக ஏற்றுக் கொள்கின்றது. சாங்கியம் புத்தி, ஆன்மா போன்ற விடயங்களினைக் காட்சியில் ஏற்பதனூடாக காட்சியில் மனதினால் ஏற்படும் பக்கச்சார்பான தவறுகள் களையப்பட்டு ஓர் உயர்வான அறிவு ஏற்பட வழியேற்படுகிறது, எனவே இரு கோட்பாடுகளிலும் காட்சி அறிவினை ஒப்பிட்டு நோக்கும் போது சாங்கிய காட்சிக் கோட்பாடு சற்று உயர்வு பெற்றதாக தோன்றுகின்றது.

## 08. அடிக்குறிப்புக்கள்

[1] www.iep.utm.edu/epistemo/…

[2] Ferrier, J.F., (1854), *Institute of Metaphysic; The Theory of Knowing and Being*, William Black Wood & Sons, London, p.46.

[3] Mukta Biswas.( 2007), *Samkhya - Yoga Epistemology,* D.K.printed (Pvt) Ltd, Delhi, pp. 248-249.

[4] Datta, D.M., (1960), *The Six Ways of Knowing*, University of Calcutta, p.36.

[5] கிருஸ்ணராஜா.சோ.,(1995), *சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல்*, இந்துசமய கலாச்சார திணைக்களம், கொழும்பு ப.14.

[6] Locke, J. ,(1690), *An Essay Concerning Human Understanding*, eliz, holt, Thomas sallet, at the George in fleet steert, Near St.Dunstan's Church, London, pp.1-3.

[7] மகாதேவன். T.M.P., (2006), *இந்து சமயத் தத்துவம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை ப.95.

[8] Radhakrishnan.S, (1957), *History of Philosophy - Eastern and Western, Vol - II*, George Allen & Unwin Ltd, London, pp. 227-228.

[9] Yalton, J. W. (ed.) (1983). *John Locke- an Essay Concerning Human Understanding*. Every man's Library, Melbourne, London.pp. 47-53.

[10] கிருஸ்ணராஜா சோ., (பதிப்பு) 2008 *ஹரியண்ணாவின் இந்திய மெய்யியல்,* குமரன் பதிப்பகம் கொழும்பு - சென்னை, ப.306.

[11] மகாதேவன். T.M.P., (2006) முற்கூறப்பட்டது. ப.95.

[12] சிவானந்தமூர்த்தி, க. (2015). *சைவசித்தாந்தம்- தமிழர் மெய்யியல்.* அம்பாள் வெளியீட்டகம், புத்தூர்,ப-194.

[13] மேலது. ப-192

**References.**


1. Max Muller, K.M. (1919). *The Six Systems of Indian Philosophy.* Longmans, Green and Co, 39 Paternoster row, London.
2. William Kelley Wright. (1942). *History of Modern Philosophy*. The Macmillan Company, New York.
3. Stuart, M. (ed.) (2016). *A Companion to Locke*. Willey Black Well Publishing Ltd, U.K.
4. Moser, P. K., Mulder, D. H & Trout, J. D. (1998). *The Theory of Knowledge: A Thematic Introduction*. Oxford University Press, New York.
5. DasGupta, S. (1975). *A History of Indian Philosophy*. Vol- I, Motilal Banarsidass, Delhi.